1969 மார்ச் 22]

துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் நியமனம்.

*424 வினு : **திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தனியாரால் நடத்தப்படும் துவக்கப்பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரத்தை அந்தந்த மாவட்டக் கல்வி அதிகாரிகளிடம் அளிப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சில தனியார் நடத்தும் பள்ளிகளில் நிர்வாகிகள் ஆரம்ப ஆசிரியர்களை நியமிக்கும் போது 'புரோ நோட்டுகள்' எழுதி வாங்கிக் கொண்டு நியமிக்கிறார்கள். சம்பளம் வாங்கியவுடன் சம்பளத்தில் ஒரு பகுதி நிர்வாகிகளுக்குப் போய், மீதிதான் அந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. ஆகவே, நிர்வாகிகளின் மூலம் சம்பளம் கொடுக்காமல், நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : அதுபற்றிக் குறிப்பிட்டு தகவல் அனுப்பினுல் நாம் தவறுகளைக் கண்டுபிடிக்கலாம்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளிலே வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் சர்க்கார் பள்ளிகளிலே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி போன்றவைகளிலே பெரிய தாரதம்மியம் இருக்கிறது. இவை இரண்டையும் ஒன்ருக அமுல்படுத்த சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

தொடக்கநிலை ஆசிரியர்கள்

*425 வினு : **திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் :** **திரு. கரு. சீமைச்சாமி :** } மாண்பு மிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கல்வியினுடைய தர உயர்வு கருதி அனைத்து ஹயர்கிரேடு ஆசிரியர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சி ஆங்கிலத்திற்கு மட்டிலும் அமைத்து செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்ற வேண்டுமென்று 27-12-1964, 1-8-1966, 8-3-1967 ஆகிய தேதிகளில் சர்க்காருக்கு அனுப்பப் பட்டுள்ள ஆசிரியர் கூட்டணி வேண்டுகோள் சர்க்காரின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த ஹையர் கிரேட் பயிற்சியை அறவே எடுத்து விடுகின்ற உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஹையர் கிரேட் ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் 10,000-க்கு மேல் இருந்தார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டு தோறும் திட்டமிட்டு அதன் மூலம் அவர்கள் இந்த செக்கண்டரி கிரேட் இடத்தை பிடித்து விடுவார்கள். இன்னும் ஆண்டுகள் செல்லச்செல்ல ஹையர் கிரேட் ஆசிரியர்கள் தேவை குறையும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வேண்டி இம்மாதிரி ஹையர் கிரேட் ' ஷார்ட் கோர்ஸ் ' கொடுக்கப்படுமா, அதை அரசு கவனிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது ஹையர் கிரேட் ஆசிரியர்கள் வேலை பார்க்க வேண்டிய இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக ஹயர்கிரேட், செக்கண்டரி கிரேட் என்று இல்லாமல் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டதற்கு பின்னாலே கூட ஒரு பயிற்சி கொடுத்தால் நல்லது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு, சில மாவட்டங்களிலே அதை ஆரம்பித்திருக்கிறோம். மாநிலம் முழுவதும் அப்படிப்பட்ட இன்-ஸர்வீஸ் டிரெயினிங் " கொடுக்க அரசாங்கம் யோசித்து வருகிறது.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ஹையர் கிரேட் இடத்திலே வேலை செய்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குள்ள சம்பளத்தை ஒரே நிலையிலே ஹையர் கிரேட், செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் இரு சாராருக்கும் ஒரே அடிப்படையில் வைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹையர் கிரேட் படித்தால் அந்தப் படிப்புக்கு ஏற்ற சம்பளம் தான் பெற வேண்டும். ஆனால் செக்கண்டரி கிரேட் படித்தவர்கள் ஹையர் கிரேடிலே வேலை பார்க்கிறார்கள் என்ற குறை இருந்த காரணத்தால் நாம் ஒரு ..பேஸ்டு புரோகிராமாகத் திட்டமிட்டு, ஆண்டுதோறும் அப்படிப்பட்ட வேலையையும் கொடுத்து சம்பளத்தையும் உயர்த்துகிறோம். இன்னும் சில காலத்திலே சரியாகிவிடும் என்று நம்புகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, இப்பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகமான ஆசிரியர்கள் தேர்ச்சி பெற்று வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்களே, அதை யொட்டி, அந்த ஆசிரியர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 'செலக்ஷன்-டிரெய்னிங்' நடத்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நமக்கு எவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமென்று நாம் ஆண்டு தோறும் திட்டம் இடுகின்றோம். ஐந்தாண்டுத் திட்டத்திலே அது கணிக்கப்படுகிறது. திட்டமிட்டவாறு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் இடம் ஒதுக்குகிறோம். இப்பொழுதே சில இடம் தரப்படுகிறது. இன்னும் தேவையையொட்டி அப்பொழுதை கப்பொழுது பரிசீலித்து எந்த எந்தப் பயிற்சியைக் குறைக்க வேண்டுமோ அவ்வப் பொழுது அவை குறைக்கப்படும்.

***426 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the higher grade teachers are paid an annual increment of Re. 1 as against Rs. 4 for the Secondary Grade Teachers ?**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

DR. H. V. HANDE : Sir, has any representation been made to increase the annual increment of Re. 1 by more than one rupee at least two rupees,—and also what is the total number of higher grade elementary school teachers in our State and what is the extra amount that is going to be spent by the Government if they are to accede to the request of those teachers ? Have the Government worked out the figures and have the Government examined the whole matter ?